Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 82 | புதன்கிழமை 16 பெப்ரவரி 2022 | மாசி 04 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

கொரோனா
நேற்று 1,252
மொத்தம் 6,30,599

உயிரிழப்பு
நேற்று 30
மொத்தம் 15,874

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதாகி 12 ஆண்டு தடுப்பில் இருந்தவர் நிரபராதி

## விடுதலை செய்தது கொழும்பு நீதிமன்றம்



யாழ்ப்பாணம், பெப்.16
பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, 12 ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவரை நிரபராதி என கொழும்பு நீதிமன்றம் விடுவித்துள்ளது.
கரவெட்டியைச் சேர்ந்த கந்தப்பு ராஜசேகர் என்பவரே நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். 15

# நீதி கோருவோர்மீது அரசு அடக்குமுறை!

## ஜனநாயக விரோதச் செயலில் அரசு

## கொழும்பு பேராயர் கடும் கண்டனம்

**கொழும்பு, பெப்ரவரி 16**
**நீதிக்காக குரல் எழுப்புபவர்களை மௌனிக்க வைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு குரல் கொடுப்பவர்களை மௌனிக்க வைப்பதற்கான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.** 15

## தொழிற்சங்க போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு, பெப்.16
சுகாதார தொழிற்சங்கத்தினரின் பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. பணிப்புறக்கணிப்புப் போராட்டம் 14 நாள்களுக்கு 15



## ஐஸ் போதை; இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.16
ஐஸ்போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமாலை நெல்லியடி, மாலு சந்தியில் சிறப்பு அதிரடிப் படை 15



## ஜொனி மிதிவெடி மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.
குப்பிளானில் நேற்று ஜொனி மிதிவெடி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. குப்பிளான் தெற்கு, கன்னிமார் கோயிலுக்கு அருகில் உள்ள காணி ஒன்றில் இருந்தே இந்த 15

## கடனுக்கு பெற்ற டீசல் கொழும்புக்கு

கொழும்பு, பெப்.16
இலங்கையில் தற்போது நிலவும் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில், இந்திய எரிபொருள் நிறுவனத்திடம் கடனுக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட 40 ஆயிரம் 15




"நடக்குமென்பார் நடக்காது, நடக்காதென்பார் நடந்துவிடும். இதுதானே இலங்கைக் கரண்டுக்கு வந்த கதி"

## குளத்தில் மூழ்கி இருவர் மரணம்!

### தென்மராட்சியில் சோகம்



சாவகச்சேரி, பெப்.16
தென்மராட்சியில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 15

## 3 மோ.சைக்கிள்கள் விபத்து இளைஞர் பரிதாப மரணம்!



வவுனியா, பெப்.16
வவுனியா, கணேசபுரம், மரக்காரம்பளை வீதியில் நேற்றுக் காலை நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரி 15

## மின் துண்டிப்புக்கு அவசியம் இல்லை!

### தாளத்தை மாற்றிப்போடுகிறது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

கொழும்பு, பெப்.16
நாட்டில் எதிர்வரும் 3 மாதங்களுக்கு மின்துண்டிப்பு மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்தது.
கொழும்பில் நேற்று 15

## விலை அதிகரிப்பா? வரிச் சலுகையா?

### நிதியமைச்சிடம் கோருகிறது பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, பெப்.16
எரிபொருள் விலை அதிகரிப்பை மேற்கொள்ள முடியாவிட்டால், வரிச்சலுகை வழங்க வேண்டும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை 15



Noolaham Foundation. noolaham.org

# கிடைக்கும் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்துங்கள்

பிரதேச செயலர் அறிவுரை

யாழ்ப்பாணம், பெப். 16

சமுர்த்தித் திட்டங்கள் ஒருவருக்கு வாழ்நாள் முழுவதும் கிடைக்கப்போவதில்லை.

எனவே உங்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை உரியகாலத்தில் பயன்படுத்தி, வாழ்க்கையை முழுமையாக வளப்படுத்துங்கள் என்று யாழ்ப்பாணம் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்ஷன் தெரிவித்தார்.

யாழ். பிரதேசெயலகத்தில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு 28வீத அதிகரித்த கொடுப்பனவை வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை மேலதிகமாக 28 வீதமாக அதிகரிக்கும் செயற்றிட்டம் நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் யாழ். மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் இந்தத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

(ம-4-20)

# கொள்கையில் இறுதிவரை தளராத புலிகளின் தியாகத்தை கொச்சைப்படுத்தாதீர்

சுரேஷ் வேண்டுகோள்

**யாழ்ப்பாணம், பெப். 16**

**இறுதிவரை தமிழீழம் என்ற கொள்கையில் உறுதியாக நின்று போராடியவர்கள் விடுதலைப்புலிகள். அவர்களின் தியாகங்களை எவரும் கொச்சைப்படுத்த இடமளிக்க முடியாது -என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் தெரிவித்த கருத்துத் தொடர்பில் புலம்பெயர் நாடுகளிலுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் பதில் கூற வேண்டும்.

இறுதிவரை தமிழீழ விடுதலைப்புபுலிகள் தமிழீழ தாயகத்துக்காகவே போராடினர். அதற்காகவே 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிர்களை ஆகுதியாக்கினர். விடுதலைப்புலிகளது பேச்சாளராகவோ அல்லது ஏதாவது பிரிவுகளிலோ செல்வராஜா கஜேந்திரன் இருந்திருந்தாராவென்பது பற்றி நான் அறிந்திருக்கவில்லை. அதேபோன்று தமிழீழக் கோரிக்கையை கைவிடுவது பற்றி விடுதலைப்புலிகள் தலைமை அவரிடம் தனிப்பட்டதாக ஏதாவது கூறியிருந்ததா என்பது பற்றியும் நானறியேன். ஆனாலும், பேசாத விடயங்களை பேசியதாக செல்வராசா கஜேந்திரன் அறிக்கை விடுவது போன்ற அரசியல் பித்தலாட்டங்களை செய்யாதிருப்பது நல்லது. ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமென அனைத்து தரப்பும் தமிழீழத்துக்காகவே போராடின. கால ஓட்டத்தில் அவர்கள் நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டனர். புலிகள் பேச்சு மேசையில் கூட மிகக்கவனமாகவே அதனை இராஜதந்திரமாகவே கையாண்டனர்.

ஆனால், கஜேந்திரன் விடுதலைப்புலிகள் தமிழீழத்துக்காகவோ, தனிநாட்டுக்காகவோ போராடவில்லை என்று விவாதத்தின் போது தெரிவித்திருந்தார். ஆனால், நான் புலிகளின் கொள்கை 'தமிழீழம்' என்ற போதும் இல்லை என அவர் மறுத்திருந்தார். பேச்சில் அதனை கைவிட்டே சென்றதாக தன்னை நியாயப்படுத்தியிருந்தார். பின்னர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள மறுப்பு அறிக்கையிலும் அதனை மீள வலியுறுத்தியுள்ளார். ஆனாலும் குறித்த தொலைக்காட்சி நிகழ்வில் பார்வையாளர்களாக பங்கெடுத்தவர்களது கேள்விகளால் குழப்பமுற்ற மனநிலையில் இதனைத் தெரிவித்தாரா என்பது தெரியவில்லை. தனது மறுப்பறிக்கையில் கூட மீண்டும் புலிகள் தனிநாட்டு கோரிக்கைக்காக போராடினாலும், இலங்கை அரசு பொருத்தமான தீர்வொன்றை முன்வைத்தால் பரிசீலிக்கத் தயாராக இருந்ததாக மீண்டும் தெரிவித்துள்ளார். அதனாலேயே தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதியாக, பேச்சாளராக செல்வராசா கஜேந்திரனை யார் நியமித்துள்ளார்கள் என்பதை புலம்பெயர் நாடுகளில் அடைக்கலம் புகுந்துள்ள முன்னாள் போராளிகள் தெளிவுபடுத்த வேண்டும் -என்றார்.

(ம-4-20)

# இலவச கண் பிரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

முல்லைத்தீவு, பெப். 16

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தாய்த்தமிழ் பேரவையின் ஏற்பாட்டில், 'விஷன் கெயார்' நிறுவனத்தின் கணினி மூலமான இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும் எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன்போது இலவச காதுப் பரிசோதனையும் இடம்பெறும்.

இதற்கமைய பொருண்மியம் நலிந்தவர்கள் இந்தப் பரிசோதனையில் கலந்துகொண்டு இலவசமாக மூக்குக்கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த சேவைக்காக மக்களிடமிருந்து எந்தவிதப் பணமும் அறவிடப்படமாட்டாது என்றும், இதற்கான நிதியை வனிதா ஜெயகாந்தன் அறக்கட்டளை வழங்கும் -என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-ரி1.19)



# ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், பெப். 16

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் கொக்குவில் புகையிரத நிலையப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரின் உடைமையிலிருந்து ஒருகிராம் அளவுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(வ-23)





இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மஹா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. சிறப்பு அம்சமாக 32 அடி உயர விஸ்வரூப கணபதி சிலையும் திறந்து வைக்கப்பட்டது. (ம)





வரலாற்றுச் சிறப்புமிக்க துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் முத்தேர் இரதோற்சவம் நேற்று சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது. (ம-4-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுகளுக்கான போக்குவரத்தை சீர்செய்வது மிகவும் கடினமே!

## மாவட்டச் செயலர் கைவிரிப்பு



யாழ்ப்பாணம், பெப். 16

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவுகளுக்கான பொதுப்போக்குவரத்து தொடர்பில், மாவட்ட மட்டத்தில் பல கூட்டங்களை நடத்தியும் தீர்வுகிடைக்கவில்லை. உயர்மட்ட அதிகாரிகளும் சாதகமான பதில் வழங்கவில்லை என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்; படகுகள் அடிக்கடி பழுதடைவதன் காரணத்தால், தீவுகளுக்கான பொதுப்போக்குவரத்து தடைப் படுகின்றது. பொதுமக்கள் மிகவும் ஆபத்தான கடற் பயணங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இது தொடர்பில் பல தடவைகள் கலந்துரையாடல்களை மேற் கொண்டுள்ளோம். மக்கள் பிரதி நிதிகள் மனுக்களையும் கைய ளித்துள்ளனர். ஊடகங்கள் மூல மும் இந்தப் பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்டன.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஏனைய திணைக்களங்க ளுடனும் கலந்துரையாடல்களை நடத்தி இதுபற்றி ஒரு முடிவு எடுக்க முயற்சித்துள்ளோம். இருந்த போதிலும் சில நடை முறை சிக்கல்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் காரணமாக அவற்றை முழுமையாக நடை முறைப்படுத்துவதில் சிரமம் காணப்படுகின்றது. மாவட்ட மட் டத்தில் பல தடவைகள் கூட்டங் களை நடத்தியும் அதற்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை.

படகுகள் திருத்தப்படாமைக்கு பட கின் தன்மை காரணம். அதாவது திருத்தக்கூடிய இடம் வடக்கில் இல்லை. பிறிதொரு இடத்துக்குக் கொண்டு சென்று அதனைத் திருத்தி அமைக்க வேண்டும். அத் துடன் மாற்றீடாக பயன்படுத்த எம்மிடம் போதியளவு படகுகள் இல்லை. மாற்றீடான படகுகள் வழங்கும் பட்சத்தில் அதற்குரிய எரிபொருள் வழங்குவதிலும் இடர் பாடு காணப்படுகின்றது - என் றார்.

(ம-4,27,26,50,20)

# கசிப்புடன் மூதாட்டி கைது

யாழ்ப்பாணம், பெப். 16

துன்னாலை பறையங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை கசிப்புடன் 70 வயது மூதாட்டி ஒருவர் கைது செய்யப்பட் டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மூதாட்டி நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்தாரென பொலி ஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சிவில் உடையில் சென்ற பொலிஸார் மூதாட்டியின் வீட்டில் வைத்து அவரைக் கசிப்புடன் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூதாட்டி பொலிஸ் பிணை யில் விடுவிக்கப்பட்டதுடன் எதிர்வரும் 22 ஆம் திகதி அவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-ரி1-23)

# வீடு முற்றுகை பெண்கள் கைது

மானிப்பாய், பெப். 16

மானிப்பாய் பொலிஸ் பிரிவில், சட்ட விரோதச் செயற்பாட்டை மேற்கொண்ட வீடொன்று பொலிஸாரால் முற்றுகை யிடப்பட்டது. அங்கிருந்து பெண்கள் இரு வர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப் பட்டனர்.

மானிப்பாய் ஆனந்தா வீதியில் அமைந் துள்ள வீடு ஒன்றில் சட்டவிரோத பாலியல் துர்நடத்தை இடம்பெறுகின்றது என்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

அங்கிருந்து 51 மற்றும் 55 வயதான 2 பெண்கள் கைது செய்யப்பட்டனர். அத் துடன் அவர்களுக்கு உடந்தையாக இருந்த 42 வயதான வீட்டின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட மூவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ம-4,125,23)

## நாடாளுமன்றின்

# பதவிக்காலம் நீடிக்கப்படாது

## டலஸ் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 16

நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிப்பது தொடர்பில் அரசு எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று அமைச் சரவைப் பேச்சாளரும், அமைச் சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

நாடாளுமன்றின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது என்று வெளியாகியுள்ள தகவல்களை மேற்கோள்காட்டி அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பட்ட கேள் விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித் தார்.

உத்தியோகபூர்வமாகவோ அல்லது உத்தியோகபூர்வமற்ற ரீதியிலோ இதுபற்றி பேச்சு நடத்தப்படவில்லை. இவ்வா றான நகர்வுகள் ஜனநாயகத்துக்கு ஏற்புடைய விடயங்கள் அல்ல. எனவே, இந்த அரசிடம் அவ்வாறான திட்டம் இல்லை - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-44)

# சர்வதேச நாணய நிதிய விவகாரம்: அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, பெப். 16

சர்வதேச நாணய நிதிய விவகாரம் தொடர்பில், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவானதொரு விளக்கத்தை வழங்குவார் என்று என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரி வித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத் துக்கு இலங்கை தரப்பில் இருந்து இன்னும் கோரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்து டன் நிதி அமைச்சர் தொடர்ச் சியாக பேச்சு நடத்தி வரு கின்றார். இலங்கையென் பது சர்வதேச நாணய நிதி யத்தின் அங்கத்துவ நாடு. இலங்கை மத்திய வங்கி யில் அலுவலகமொன்று கூட உள்ளது. இலங்கை நிலைவரம் தொடர்பில் அறிக்கையொன்று தயாரிக் கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் குறிப்பிட்டுள் ளார். அது சம்பந்தமாக அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவான விளக் கத்தை வழங்குவார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-4,44)




**மன்னார், மடு வலயத்தில உள்ள ஒரு தேசியப் பள்ளிக்கூடத்தில நடந்த கதை உங்களுக்கு தெரியுமோ? அந்தப் பள்ளிக்கூட பிரின்சிபலின்ர மகனும் இப்ப ஏ.எல். எக்ஸாம் எடுக்கிறாராம். கிட்டடியில ஒரு பாடத்துக்கு எக்ஸாம் நடக்கேக்க, வேற ஒரு எக்ஸாம் மண்டபத்தில இருந்து ஒரு வாத்தியார் தன்ர போனில எக்ஸாம் பேப்பரை படமெடுத்து, எக்ஸாம் டியுட்டிக்குப் போகாத இன்னொரு வாத்தியாருக்கு அனுப்பியிருக் கிறார். அந்த வாத்தியார் இந்தப் பாடத்தில வலுசுழியன். அதால, கொஞ்ச நேரத்திலேயே எல்லாக் கேள்விக்கும் சரியான மறுமொழி எழுதி. அதைப் படமா எடுத்து வட்ஸப்பில அனுப்பி இருக்கிறார்.**

**அப்பிடி வட்ஸப்பில அனுப்பின மெசேஜ் ஆருக்குப் போனது தெரியுமோ? தேசியப் பாடசாலை பிரின்சிபலின்ர மகனுக்குத்தான். எக்ஸாமுக்கு போற மாணவர்கள் போன் கொண்டு போகக் கூடாது எண்டதுதான் சட்டம். ஆனால், அந்தப் பள்ளிக்கூட எக்ஸாம் டியூட்டி செய்தவையும், அந்தப் பள்ளிக்கூட அதிபரோட நல்ல மாதிரி. அதால போனையும் கொண்டுபோக விட்டிட்டு, அதின்ர வட்ஸப்புக்கு வந்த மெசேஜையும் பாக்க பெர்மிசன் குடுத்திருக்கினம்.**

**அதைவிட இன்னொரு பகிடியும் நடந்திருக்கு. ஒரு பள்ளிக்கூடத்தில எக்ஸாம் நடக்குதெண் டால், அந்தப் பள்ளிக்கூடத்துக்கு பொறுப்பான அதிபர் அங்காலிப் பக்கம் எட்டியும் பாக்கக் கூடாது. ஆனால் இந்தப் பள்ளிக்கூட அதிபர் என்னெண்டால், எக்ஸாம் நடக்கிற அண்டைக்கு அங்க வந்து, பள்ளிக்கூட ரவுட்டரையும் (இணை யச் சேவை வழங்கும் உபகரணம்) போட்டு விட் டிட்டுப் போயிருக்கிறார். அந்த நெட் கனெக்சனைப் பாவிச்சுத்தான் பெடியன், வட்ஸப்பில வந்த விடையைப் பார்த்து பார்த்து எழுதியிருக்கிறார். ஆனால் நல்லவேளையா அதை ஒரு நேர்மை யான எக்ஸாம் ஒப்பீசர் பார்த்திட்டார். அவ்வளவு தான் பெடிப்பிள்ளை பிடிபட்டுப் போனார். பிறகு பொலிஸூக்கு அறிவிச்சு, அவையும் வந்து விசாரிச்சால், எல்லாம் எக்ஸாம் டிட்யூட்டி செய் யிறவையின்ர அனுசரணையோடதான் அதிபர் தன்ர பிள்ளைக்காக இப்பிடியெல்லாம் செய்தவர் எண்ட உண்மை தெரியவந்திருக்கு. இப்ப அங்க எக்ஸாம் டிட்யூட்டி செய்த கொஞ்சப் பேர் நிப்பாட் டுப்பட்டிருக்கினம். விசாரணை முடிஞ்சபிறகுதான் அவைக்கு என்ன தண்டனை கிடைக்கும் எண்டு தெரியவரும்.**

**இப்பிடி குறுக்கு வழியில பிள்ளையளை முன் னேற்ற நினைக்கிறது, உண்மையில அந்தப் பிள்ளைக்குத்தானே பாதிப்பு. இப்ப பிடிபடேக்க கூட 'பிரின்சிபலின்ர' பிள்ளை இப்பிடிச் செய்திட் டானே' எண்டுதான் இளக்காரமாக கதைச்சவை. எல்லாரும் இப்பிடிச் சின்னச் சின்னப் பிழையள் விடுகிறது சாதாரணம் தான். ஆனால் அதைச் செய்ய ஐடியா குடுத்தவையும், சப்போர்ட் செய்த ஆக்களும் நல்லது செய்யிறம் எண்டு நினைச்சு அந்தப் பிள்ளைக்கு கெட்டதுதான் செய் திருக்கினம். இனி அந்தப் பிள்ளை எப்பிடித் தலை நிமிர்ந்து ஊரில நடக்கும்?**

**அதோட எக்ஸாம் டியூட்டிக்கு போனாமாம், டியூட்டி பார்த்தமாம், வந்தமாம் எண்டு இருக் காமல் இப்பிடி பிரின்சிப்பலின்ர மகன், மகள் எண்டெல்லாம் எக்ஸாமில தில்லுமுல்லுப் பண்ண விடு கிறது எந்த வகையில நியா யம்? வேலியே பயிரை மேய லாமோ?**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





### கல்லுண்டாய் வெளியில்

# குடிதண்ணீர் கோரி மக்கள் போராட்டம்

**யாழ்ப்பாணம், பெப். 16**

**கல்லுண்டாய்வெளி புதிய வீட்டுத்திட்ட குடியிருப்புப் பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகத்தை சீராக்கித் தருமாறுகோரி அந்தப் பகுதி மக்களால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம் - காரைநகர் அராலி வீதியின் கல்லூண்டாய் பகுதியில் வீதியை வழிமறித்து இந்தப் போராட்டத்தை மக்கள் முன்னெடுத்தனர். இதனால் அந்தப் பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடினர்.

இதையடுத்து போக்குவரத்தைப் பாதிக்காமல் வீதி ஓரமாக நின்று பொதுமக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். மேலும் மானிப்பாய் பிரதேசசபையின் தவிசாளர் ஜெபநேசன், மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், யாழ். மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரதேச செயலர் யசோதா உதயகுமார் ஆகியோர் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று மக்களோடு கலந்துரையாடினர்.

குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு உரிய தீர்வு உடனடியாகப் பெற்றுத் தரப்படும் என அவர்கள் தெரிவித்தமையை ஏற்று போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது. போராட்டத்தின்போது குடியிருப்புப் பகுதியில் உள்ள மயானத்தை வேறு இடத்துக்கு மாற்றாமை தொடர்பிலும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குடிதண்ணீர் விவகாரம் தொடர்பில், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், அந்தப்பகுதிக்கு தண்ணீர் கொண்டு சென்ற சாரதியொருவர் குறித்த பகுதி மக்களால் அச்சுறுத்தப்பட்டதால், அங்கு தண்ணீரை கொண்டுசெல்ல சாரதிகள் அச்சப்படுகின்றனர் என்று மானிப்பாய் பிரதேசசபையின் தவிசாளர் ஜெபநேசன் தெளிவுபடுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-125)

## கல்லுண்டாய்வெளிக்கு இராணுவத்தால் தண்ணீர்

யாழ்ப்பாணம், பெப். 16

கல்லுண்டாய்வெளி குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு இராணுவம் குடிதண்ணீர் வழங்கியுள்ளது.

தண்ணீர்ப் பிரச்சினையை சீர்செய்து தருமாறுகோரி, கல்லுண்டாய்வெளி புதிய குடியிருப்புப் பகுதி மக்கள் நேற்றையதினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். இந்தநிலையில், போராட்டத்தின்போது குறித்த பகுதிக்கு வருகைதந்த இராணுவத்தினர் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதிக்கு விடயத்தை தெரியப்படுத்தினர். இதையடுத்தே இராணுவத்தால் தண்ணீர் விநியோகிக்கப்பட்டது. (வ-27)



## மின்சாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உரையாடல்

சாவகச்சேரி, பெப். 16

இலங்கை மின்சாரசபையின் கிழக்கு பிராந்தியத்துக்குட்பட்ட மக்களின் மின்சாரப் பாவனை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கலந்துரையாடல், நேற்று தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மின்சார விநியோகம் மற்றும் மின்சாரப் பாவனையில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக பிரதேச செயலகத்துக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் பிரதிநிதிகளும் இலங்கை மின்சார சபையினரும்இணைந்து முறைப்பாட்டாளர்களுடன் நேரடியாகக் கலந்துரையாடினர். கலந்துரையாடலில் தென்மராட்சி உள்ளிட்ட யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்தனர்.

இதன்போது பொது மற்றும் தனிப்பட்ட மின்பாவனை பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுத்தனர். (ம-ரி1,9)

## வாகன விபத்தில் இருவர் படுகாயம்



முச்சக்கர வண்டியும்ஹைஏஸ்வாகனமும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து கைதடி- மானிப்பாய் பிரதான வீதியின் கோப்பாய் கிருஷ்ணன் கோயில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த விபத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதமடைந்தது. விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-23)

## வாழ்வுரிமை இயக்கத்துக்கு பயங்கரவாதப் பிரிவு அழைப்பு

மன்னார், பெப். 16

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் எஸ்.சிவகரனை, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு, கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் குறித்த அமைப்பு சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் எடுத்துவருமாறு, மன்னார் பொலிஸார் ஊடாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ம-4-56)

## 15 இலட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், பெப். 16

பட்டப்பகலில் வீடொன்றிலிருந்து 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் அராலிதெற்கு அமெரிக்கன் பாடசாலைக்கு முன்பாக உள்ள வீட்டில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வீட்டார் உறவினர் வீட்டுக்குச் சென்று திரும்பியபோது வீட்டின் கதவு திறந்திருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது அலுமாரியில் இருந்த நகைகள் திருடப்பட்டிருந்தன. 11 பவுண் தாலிக்கொடி, ஒன்றரைப் பவுண் சங்கிலி என்பன இவ்வாறு திருடப்பட்டுள்ளன. சம்பவ இடத்துக்கு விரைந்த தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-4.27.125)



## நன்னீர் மீனவர்களுக்கு வள்ளங்கள் வழங்கல்

முல்லைத்தீவு, பெப். 16

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியில், 6.4 மில்லியன் ரூபா பெறுமதியான, வள்ளங்கள் நன்னீர் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த நன்னீர் மீன்பிடி சங்கங்களைச் சேர்ந்த 19 மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு 49 வள்ளங்களும், 58 குளிரூட்டும் பெட்டிகளும் வழங்கப்பட்டன. (ம-4-19)

## மருத்துவர் இடமாற்றம்

வவுனியா, பெப். 16

வவுனியா மருத்துவமனையில் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி க.ராகுலன், மேற்படிப்புக்காக, சுகாதார அமைச்சுக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

பணிப்பாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்ட அவர், தனது கடமைகளை பதில் பணிப்பாளராகக் கடமையாற்றிய மருத்துவக் கலாநிதி மதுரகனிடம் கையளித்துள்ளார். வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையின் சேவை வழங்கலின் தரத்தை, குறுகிய காலத்தில் பல்வேறு பரிமாணங்களில் விருத்தி செய்திருந்த இவர், மேற்படிப்புக்காக சுகாதார அமைச்சுக்கு செல்கின்றார். (ம-4-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் திட்டங்களை ஆதரிக்க முடியாது

## ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவிப்பு

**மன்னார், பெப். 16**

**மக்களின் வாழ்வாதாரத்துக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிக்க முடியாது என்று மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.**

மன்னாரில் மேற்கொள்ளப்பட இருக்கும் இரண்டாம் கட்ட காற்றாலை மின்உற்பத்தி விரிவாக்கம் தொடர்பில், மன்னார் மக்களுக்கு விழப்புணர்வை மேற்கொள்ளுவதற்காக கொழும்பிலிருந்து வருகை தந்த குழுவினரிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

பல நூற்றாண்டு காலமாக மன்னார்மக்கள் முக்கியமான எந்தவித அபிவிருத்தியும் காணவில்லை. தற்போது மன்னார் தீவு மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. கனியவள மணல் அகழ்வு ஒருபுறமிருக்க, மக்கள் செறிந்து வாழும் அயலில் பொருத்தப்பட்டுள்ள 36 காற்றாலைகளால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். காற்றாலைகள் பொருத்தப்பட்ட பின்னர், மீன்பிடி வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடல் உட்புகாத தன்மையில் இருந்த மணல் திட்டிகள் மற்றும் கடலோரத்தில் இருந்து வந்த அடம்பன்கொடி போன்ற தாவரங்கள் அழிந்துபோன நிலையில் காட்சியளிக்கின்றன.

எண்ணெய்ப் பரிசோதனை, போதைப் பொருள் கடத்தல் போன்ற இவ்வாறான பிரச்சினைகளால் மன்னார் தீவு பாதிப்பை எதிர்கொண்டுள் ளது. எனவே இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க இடமளிக்க முடியாது-என்றார். (ம-4-60)



## காற்றாலைச் செயற்றிட்டம் மக்களுக்கு விழிப்புணர்வு!

மன்னார், பெப். 16

மன்னாரில் இரண்டாம்கட்ட காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கம் தொடர்பில் மன்னார் மக்களுக்கு விழப்புணர்வை ஏற்படுத்த, கொழும்பிலிருந்து துறை சார்ந்த குழுவினர் மன்னாருக்கு வருகை தந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தலைமையிலான குழுவில், நிலைபெறுதகு வலு அதிகார சபைத் தலைவர் ரஞ்சித் சீபால, நிலைபெறுதகு வலு அதிகாரசபை தேசிய ஆய்வு உதவித் திட்டப் பணிப்பாளர் மொமட் அவ்ஷல் மற்றும் மன்னாரின் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கத்தின் இணைப்பாளர் திருமதி தமார டில்ஹானி உள்ளிட்டோர் அங்கம் வகிக்கின்றனர்.

இவர்கள் மன்னார் பிரஜைகள் குழுவினர் மற்றும் ஆளுநர் சபையினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். தொடர்ந்து மன்னார் மாவட்ட மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர். (ம-4,60)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு மானியம், கடன் வழங்கல்



யாழ்ப்பாணம்,பெப்.16

சுபீட்சத்தின் நோக்கு எண்ணக்கருவுக்கு அமைய சமுர்த்தி பயனாளிகளுக்கு, மானியத்தொகை மற்றும் குறைந்த வட்டியிலான கடன் வழங்கும் நிகழ்வு, யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.


நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர், மேலதிக செயலர், மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் ஆகியோர் கலந்துகொண்டு அதிகரிக்கப்பட்ட மானியத் தொகை மற்றும் கடன்களைப் பயனாளிகளுக்கு வழங்கினர். (ம-4-27)



சுபீட்சத்தின் நோக்குத் திட்டத்தின்கீழ் சமுர்த்திப் பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு வவுனியாவில் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம் கிராம அலுவலர் பிரிவில், சமுர்த்திப் பயனாளிகளுக்கான அதிகரித்த கொடுப்பனவு சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழங்கப்பட்டது.

கிராம அலுவலர் எஸ்.ராகுல், சமுர்த்தி உத்தியோகத்தர் ம.விக்கினேஸ்வரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.சங்கீதன், சமுர்த்திக் குழுக்களின் தலைவர்கள், சமுர்த்திப் பயனாளிகள் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-4-18)




## மலையகத்தின் வாழ்வியல் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் ஒளிப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 16

மலையக மக்களின் வாழ்வியல் மற்றும் துன்பங்களை எடுத்தியம்பும் 'தேயிலைச் சாயம்' எனும் தொனிப்பொருளிலான ஒளிப்படக் கண்காட்சி யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதில் 200 வருட மலையக மக்களின் வாழ்க்கை வரலாற்றைப் புலப்படுத்தும் முகமாக பயிற்றுவிக்கப்பட்ட இளம் புகைப்பட கலைஞர்கள் மூலம் பெறப்பட்ட 45 ஆயிரம் புகைப்படங்களில், 100 புகைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையமும், மலையக இளைஞர், யுவதிகளும் இணைந்து முன்னெடுத்துள்ள இந்தக் கண்காட்சியைப் பல்வேறு தரப்பினரும் பார்வையிட்டு வருகின்றனர். இன்றும் இந்தக் கண்காட்சி இடம் பெறும். (ம-4,125,27)



நுவரெலியாவில் பிரதேச செயலகத்தை அதிகரிப்பதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானியை நடைமுறைப்படுத்துமாறு கோரி, மலையக மக்களுக்காக இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தமது கையெழுத்துக்களை நேற்றுமுன்தினம் பதிவு செய்தனர். (ம-4,27,20)

## தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுப் போட்டி மார்ச் மாதம் ஆரம்பம்

சாவகச்சேரி, பெப். 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் சேவை மன்றங்கள் ஆகியவற்றுக்குரிய இந்த வருடத்துக்கான விளையாட்டுப் போட்டிகள் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ளன.

போட்டியில் பங்குபற்றவுள்ள விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் மன்றங்கள் தமது பதிவை உறுதிப்படுத்தும் வகையில் பிரதேச விளையாட்டு அலுவலர் மற்றும் இளைஞர் சேவைகள் அலுவலர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-ரி1-9)

## மலையக மக்களுக்கு வலுக்கின்றது ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 16

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு தொடர்பில், மலையக அரசியல் அரங்கம் ஆரம்பித்துள்ள கையெழுத்துப் போராட்டத்துக்கு, சமூக விஞ்ஞான ஆய்வுமையம் ஆதரவு தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் 5 பிரதேச செயலகங்களை உருவாக்குவது தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்டும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதற்கு எதிராகக் கையெழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது, வடக்கு - கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு செயற்படும் சமூக விஞ்ஞான ஆய்வு மையமும் அதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

மலையக மக்களுக்கு ஆதரவான கையெழுத்துப் போராட்டத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் ஆய்வுமையம் அழைப்பு விடுத்துள்ளது. (ம-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஹெரோய்னுடன் இருவர் கைது!



யாழ்ப்பாணம், பெப். 16
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த இருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கடந்த சனிக்கிழமை கைதுசெய்தனர்.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநகர் பகுதியில் ஹெரோய்னை ஒருவர் உடைமையில் வைத்துள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், 50 மில்லிகிராம் ஹெரோய்னுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.
அதேபோன்று, திருநகர் பகுதியிலும் நபரொருவர் ஹெரோய்னை உடைமையில் வைத்துள்ளார் என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், 490 மில்லிகிராம் ஹெரோய்னை மீட்டனர். சந்தேக நபரொருவரும் கைதுசெய்யப்பட்டார்.
அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. (ம-125)

# உடைமையில் கஞ்சாவுடன் மானிப்பாயில் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப்.16
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெவ்வேறு பகுதிகளில் கஞ்சா மற்றும் கஞ்சா சுருட்டு கள்போன்றவற்றை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
மானிப்பாய் நகர்ப் பகுதியில் கஞ்சா மற்றும் கஞ்சா சுருட்டு போன்றவற்றை உடைமையில் வைத்திருக்கின்றனர் என மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனையில் 750 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.
இதன்போது யாழ்ப்பாணம் புதிய சோனகத் தெருவை வதிவிடமாகக் கொண்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
கைது செய்யப்பட்ட இருவருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ச-125)

# வன்னிக் காணிப் பிரச்சினைக்கு வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா, பெப். 16
வன்னியின் மூன்று மாவட்டங்களிலும் காணப்படும் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான காணி அமைச்சின் நடமாடும் சேவை எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தானின் ஊடகப் பிரிவு இதனை அறிவித்துள்ளது. (வ-110)

# மாணவனை மறித்து பணம் அபகரிப்பு

சாவகச்சேரி, பெப். 16
சைக்கிளில் வந்த மாணவனை மறித்து கஞ்சா வைத்திருப்பதாகக்கூறி சோதனையிட்டு பணம் அபகரித்த சம்பவமொன்று யாழ்ப்பாணம் சின்னக்கடைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
நாவற்குழி, ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த மாணவன் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிலையத்திலிருந்து வீடு திரும்பிய வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மாணவனை மறித்து கஞ்சா இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதால் பரிசோதிக்க வேண்டுமெனக் கூறியுள்ளனர்.
இதையடுத்து சோதனையிடுவதுபோல நடித்து மாணவன் வைத்திருந்த 2 ஆயிரம் ரூபாவை அபகரித்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கரைதுறைப்பற்றில் கிராம அலுவலர் பிரிவு

# எல்லை மீள்நிர்ணயத்துக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிப்பு!

**முல்லைத்தீவு, பெப். 16**
**முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை எல்லை மீள் நிர்ணயம் செய்வதற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.**



219 கிராமங்களை கொண்ட கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் 46 கிராம அலுவலர் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றில் 14 கிராம அலுவலர் பிரிவுகளை இணைத்து 6 கிராம அலுவலர் பிரிவுகளாக எல்லை நிர்ணயம் செய்வதற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அனுமதி கோரப்பட்டது. இதற்கு மக்கள் பிரதிநிதிகளும் பொது மக்களும் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.
கிராம அலுவலர் பிரிவுகளை இணைப்பதால் கிராம அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளில் பெரும் பிரச்சினை எழும். எனவே இது தொடர்பில் கிராம மட்ட அமைப்புக்களுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. (வ-19)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

சாவகச்சேரி, பெப். 16
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 39ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும், கடந்த சனிக்கிழமை தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.
இதன்போது தலைவராக வே. சிவநீதன், உபதலைவராக ந.சிவபாலன், செயலாளராக இ.சுரேஸ், உதவிச் செயலாளராக வை.சிவராசா, பொருளாளராக வ.சிறிபிரகாஸ் ஆகியோருடன் 16 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.
மன்றத் தலைவர் ந.சிவபாலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய கடன் அலகின் முகாமையாளர் கஸ்தூரி பீஸ்மன், சாவகச்சேரி கிளை முகாமையாளர் அ.பிரான்சிஸ், சாவகச்சேரி நகர பிரிவு கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-ரி1-9)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 16
யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறும் வாராந்த சிறப்பு சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.
இதன்போது சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தலைமையுரையை பரிபாலன சபைத்தலைவர் த.சோதிலிங்கம் ஆற்றுவார்.
சிறப்புச்சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'ரதோற்சவம் உணர்த்தும் வாழ்வியல்' எனும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச-இ)



## மினம்பிட்டி மயானத்தில்

# கூரையற்ற எரிகொட்டகை; சடலங்கள் எரியூட்டுவதில் சிரமம்

யாழ்ப்பாணம், பெப். 16
அராலி கிழக்கு மினம்பிட்டி இந்து மயானத்தின் எரிகொட்டகைக்கு மேல்கூரை இல்லாததால் மழைகாலத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் அ.நிமலரோகன் தெரிவித்தார்.
குறித்த பகுதி மக்களின் சிரமங்களை கருத்தில்கொண்டு, வலி. மேற்கு பிரதேசசபை இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார். (ம-ரி1-159)

# கண்டாவளை பிரதேசத்துக்கு மருத்துவ அதிகாரி நியமனம்

கிளிநொச்சி, பெப். 16
கண்டாவளை பிரதேசத்துக்கு பொறுப்பு மருத்துவ அதிகாரியாக கரைச்சி பிரதேச பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் கஜேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது.
பிரதேசத்தின் மருத்துவ சேவைகளை இலகுபடுத்தும் வகையிலும், நிர்வாகச் செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்கும் வகையிலும் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கண்டாவளை பிரதேசத்தின் மேலதிக பொறுப்பு மருத்துவ அதிகாரியாக மருத்துவர் பிரியந்தினி கமலசிங்கம் கடமையாற்றி வரும் நிலையில், மருத்துவர் கஜேந்திரா கரைச்சிக்கு மேலதிகமாக கண்டாவளைக்கும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரிவித்துள்ளது. (ம-4-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கெஞ்சுவது சரியா?

ஐக்கிய நாடுகள் சபையில் மேற்கொள்ளும் தீர்மானங்களால் – நெருக்குவாரங்களால் ஒருபோதும் நல்லிணக்கம் ஏற்படாது. நட்பு ரீதியான அணுகுமுறையையே ஐக்கிய நாடுகள் சபையிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது உணர்வுபூர்வமான விடயம். இந்தப் பிரச்சினைக்கு ஓர் இரவில் தீர்வைக் கண்டுவிட முடியாது என்றும் தன் 'துறைசார்' நியாயத்தை எடுத்துரைத்துள்ளார் பீரிஸ்.

இதில் இரண்டு விடயங்களை பீரிஸ் புரிந்துகொள்ள வேண்டும். நெருக்குவாரங்களால் நல்லிணக்கம் ஏற்படாது என்பது சர்வதேசத்துக்கு மட்டும் பொருத்தமானது அல்ல. உண்மையில் சர்வதேசம் ஏற்படுத்தும் நெருக்குவாரங்கள் பாதிக்கப்பட்ட ஒரு தரப்புக்கு நீதியை நிலைநாட்டுவதற்காகவும், இலங்கை தனது பொறுப்புக் கூறலை வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்காகவும்தான். ஆனால், இலங்கை அரசு இந்தத் தேசத்தில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக ஏற்படுத்தும் நெருக்குவாரங்கள் சொல்லிமாளாதவை.

ஞானசார தேரர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள 'ஒரு நாடு: ஒரு சட்டம்' செயலணி சிறுபான்மை மக்களுக்கான சட்ட ஏற்பாடுகளை இல்லாமல் செய்வது முதல், திட்டமிட்ட பௌத்த மயமாக்கல், சிங்களத் திணிப்புகள், நில ஆக்கிரமிப்புகள் வரையில் ஏகப்பட்ட நெருக்குவாரங்கள் சிங்கள பேரினவாதத்தால் தமிழர் தேசத்தில் இன்றளவும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இவை நல்லிணக்கத்தை அடியோடு சிதைத்தெறியும் செயல்கள் என்பது ஏன் பீரிஸுக்கும் அவர் தரப்புக்கும் புரியவில்லை? இந்த நெருக்குவாரங்களுக்கு எதிராகக் குரல்கொடுக்க ஏன் பீரிஸால் முடியவில்லை?

வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில், இலங்கையை சர்வதேசப்பொறியில் இருந்து மீட்டெடுப்பதற்காக தனது துறைசார்ந்த பல்வேறு பொறிமுறைகளை – வியூகங்களை – பீரிஸ் வகுக்க வேண்டியது அவரது கடமைதான். ஆனால், அதற்காக 'ஒரே எண்ணவோட்டத்தை' தேசியம், சர்வதேசம் என்ற இருவேறு தளங்களில் இருந்து நடைமுறைப்படுத்திப் பார்ப்பதெல்லாம் சுத்த அபத்தம்.

'இனப்பிரச்சினை என்பது கத்திமேல் நடப்பதுபோன்று மிக அவதானமாகவும் நிதானமாகவும் கையாளப்பட வேண்டிய ஒரு விடயம். இதற்கு ஓர் இரவில் தீர்வைக் கண்டுவிட முடியாது' என்பதும் கோத்தாபய தரப்பினர் சர்வதேசத்துக்குச் சொல்லும் செய்தியாக அமைகின்றது. அந்தச் செய்தியில் உண்மையுண்டுதான். இருப்பினும், இப்படி ஒரே இரவில் தீர்க்க முடியாத பிரச்சினையை இல்லாமல் செய்வதற்காக சிங்கள அரசுகள் எப்போதாவது இதயசுத்தியுடன் செயற்பட்டதுண்டா? 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் போராட்டம் ஆயுத அளவில் மௌனிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் இன்றுவரை இனப் பிரச்சினையைத்தீர்ப்பதற்கு கொழும்பு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? 12 ஆண்டுகால இந்த அவகாசம் போதாதா? இனப் பிரச்சினையில் மேலும் மேலும் எண்ணெய் ஊற்றி கொழுந்துவிட்டு எரியச்செய்வதைத் தவிர வேறெந்த நடவடிக்கையை சிங்கள அரசுகள் மேற்கொண்டனா? சர்வதேசம் பல தடவைகள் இலங்கைக்கு அவகாசங்களை வழங்கிக் களைத்துவிட்டது. ஆனால், இலங்கைதான் எந்தவொரு உருப்படியான எதிர்வினையையும் ஆற்றவில்லை.

இத்தனை வருட அவலங்களில் இருந்தோ, போரின் அழிவுகளில் இருந்தோ இலங்கை அரசாங்கம் எதையும் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், ஜெனீவாவில் நல்லபிள்ளை என்று [illegible] பதற்காக ஜனநாயக வேடம் பூணுவதும் [illegible] க் கெஞ்சுவதும் ஒரு நல்ல அரசுக்கு அழகல்ல. [illegible]

நாளொரு நல்வார்த்தை

"மிக அற்பமான விடயங்களைப் பற்றி அதிகமாக அறிந்து கொள்கிறவனே நிபுணன் ஆகிறான்"

- சாமுவேல் பட்லர்.



# பல்கலை ஓய்வூதியர்களுக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு!

## அரசிடம் கோரிக்கை

வவுனியா, பெப். 16

அரச பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு, அதிகரிக்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அதிகரிப்பு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டது. அத்துடன் சமுர்த்திப் பயனாளிகளுக்கும் அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. தனியார் துறையினருக்கும் அதிகரித்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் பல்கலைக்கழகங்களில் கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு அந்தக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இவர்களுக்கு 23 வருடங்களாக ஓய்வூதியக் கொடுப்பனவுத் திட்டத்தில் எந்தவித அதிகரிப்பும் வழங்கப்படவில்லை. இதனால் பல்கலைக்கழகங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் அரச சலுகைகளைப் பெறமுடியாமல் உள்ளனர்.

எனவே ஏனைய ஓய்வூதியர்களுக்கு வழங்கியது போன்று, பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4-18)

## இராமேஸ்வரம் மீனவர்கள் 21 முதல் போராட்டம்!

இராமேஸ்வரம், பெப். 16

இலங்கை அரசைக் கண்டித்தும், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுத்தருமாறு வலியுறுத்தியும் இராமேஸ்வரம் மீனவர்கள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் தங்கச்சிமடத்தில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 10க்கும் மேற்பட்ட விசைப்படகுகளுடன், 50க்கும் மேற்பட்ட மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சிறை பிடித்துள்ளனர். இதனால் இராமேஸ்வரம், தங்கச்சிமடம், மண்டபம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மீனவர்கள் தொழில் தேடி அண்டை மாநிலங்களுக்குச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து அவசர ஆலோசனைக் கூட்டத்தில் காலவரையறையற்ற வேலை நிறுத்தப்போராட்டத்தை மேற்கொள்ள மீனவர்கள் தீர்மானித்துள்ளனர். (ம-4-56-113)

## 45 நாள்களில் 200 பேருக்கு கொரோனா

சாவகச்சேரி, பெப். 16

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருடத்தின் முதல் 45 நாள்களில் (ஜனவரி 01 தொடக்கம் பெப்ரவரி 15 வரை) கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 இனைத் தாண்டியுள்ளது.

தொடர்ச்சியாக காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வருவோருக்கு மேற்கொள்ளப்படும், பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். (ம-4-9)

நாளை 17.02.2022 வியாழக்கிழமை மாசி 05

சுபநேரம் : 08.03 - 09.33
ராகுகாலம் : 02.03 - 03.33
மாசி மகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 07 . 1932



இறப்பு 15 . 02 . 2022

## திருமதி பிலிப்ஸ் திரேசம்மா

யாழ். மயிலிட்டியை பிறப்பிடமாகவும் யாழ். மட்டுவிலை நிரந்தர வதிவிடமாகவும், யாழ். நவாலியினை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பிலிப்ஸ் திரேசம்மா அவர்கள் நேற்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிமியோன் மதலேனா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற ஆயுர்வேத வைத்திய கலாநிதி பேதுரு பிலிப்ஸ் அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராணி லியோன் (ஆயுர்வேத வைத்தியர்), பிறேமராணி குணநாயகம் (France), றூபராணி குறூஸ் ஜோகதாஸ் (Denmark) காலஞ்சென்ற பிலிப்ஸ் புவிராஜ் மற்றும் நிஷாகரன் (Denmark) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான லிஜோன், குணநாயகம் மற்றும் குறூஸ் ஜோகதாஸ் (Denmark), ஆன் ஷிறாணி (Denmark) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (17.02.2022) வியாழக்கிழமை நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, மு.ப. 11.30 மணியளவில் மட்டுவில் லூர்து அன்னை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
077 405 5674

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 42953) 1-6

# நன்றி நவிலல்

தோற்றம் 07 . 05 . 1966



மறைவு 04 . 01 . 2022

## அமரர் முத்தையா நீதிராஜா

உரிமையாளர்: ஜம்போ ஹாட்வெயார் / றோயல் ஹாட்வெயார் / றோயல் LUNCH / T.D.K. Silk (Swiss)

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து எமது துயரத்தில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றியினை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்தி பூஜை நாளை (17.02.2022) வியாழக்கிழமை Andelfingerstrasse 27, 8452 Adlikon Swiss என்னும் விலாசத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர் மற்றும்
மைத்துனர் சோ.பிரகதீஸ்வரன்
உரிமையாளர்
சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ்,
யாழ்ப்பாணம்.

# மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். மாவட்ட திரிசாரணர் குழாமின் ஏற்பாட்டில், இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் மருத்துவமுகாம் இடம்பெறவுள்ளது. (ம-ரி1)



முல்லைத்தீவு - கேப்பாபிலவு - பிலக்குடியிருப்பு கிராமத்தில் வசிக்கும் பொருண்மியம் நலிந்த முன்பள்ளி ஆசிரியை யாழினிக்கு பிரான்ஸ் புளொட் கிளையால் நிதி உதவி கடந்த 1 ஆம் திகதி வழங்கப்பட்டது. நிகழ்வில் தோழர் பவான், தோழர் கனக தவராசா, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் யூட்சன், கலைஞர் தவராசா ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினர். (ரி1-13)



சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொதுநூலகத்தின் 2021 ஆம் ஆண்டின் வாசிப்பு மாத போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 12ஆம் திகதி இடம்பெற்றது. இந்தப் போட்டியில் வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலய மாணவிகள், பிரிவு 1 கட்டுரைப் போட்டியில் தீ.சானுகா, ஞா.திசாளினி ஆகியோர் 'ஏ' தரச் சித்தியையும் அ.பிரிந்தா 'சி' தரச் சித்தியையும் பெற்று வெற்றிபெற்றனர். (ச-ய-159)



யாழ். வேலணைகிழக்கு மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 'பூமணி அம்மா' அறக்கட்டளையின் இலங்கை நிர்வாகிகளான அறக்கட்டளையின் ஆலோசகர் இ.மயில்வாகனம், இணைப்பாளர் ரி.யோசேப், தலைவர் தனேந்திரன், செயலாளர் என்.விந்தன் கனகரட்ணம், உப செயலாளர் இ.சற்குருநாதன் மற்றும் மண்கும்பான் பங்குத் தந்தை ஜெகன்குமார் ஆகியோரால் அண்மையில் காலணிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ய-50)

# விழி இழந்தோர்க்கு ஒளிகாட்டுவோம்!

## ஆசிரியருக்கு கடிதம்

'மனிதன் நிலைப்பதுண்டு வாழ்வு நிலைக்குமென்று, கடவுள் நினைப்பது பாவம் மனிதனென்று' என ஒரு பாடல் உண்டு. மனிதனின் வாழ்வு நிச்சயமற்றது. சாவு எங்கே எப்படியான விதத்தில் எப்போது வரும்வரும் என யாருக்கும் தெரியாது. அரசன் முதல் ஆண்டிவரை இந்தச் சாவில் இருந்து தப்பிக்கவே முடியாது. மரணம் என்றோ ஒரு நாள் வந்தே தீரும். ஒருசிலர் சாகாவரம் பெற்றவர்கள்போல் நடப்பதுண்டு. படைத்தவன் உயிரை எடுப்பது குற்றமில்லை.

ஆனால், நாம் அந்த உயிரை எடுப்பதற்கு முன் சந்தர்ப்பம் வரும்போது நல்ல காரியங்களைச் செய்யலாம்.

படித்து பட்டம் பெற்றால்தான் ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வது என நினைப்பது தவறு. கல்வி கற்காதவர்கள்கூட மக்களுக்கு சேவைசெய்து இறப்பின் பின்கூட நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்கள் பல உள்ளன.

உதாரணமாக இன்று எம் மத்தியில் பலர் பார்வையற்று இருட்டில் வாழ்கின்றனர். அவர்களுக்கு எம் இறப்பின் பின்னாவது எமது விழிகளைத் தானமாக வழங்கலாம். இறப்பின் பின் அக்கினிக்கும் மண்ணுக்குள்ளும் போகும் விழிகள் இந்தப் பார்வையற்றவர்களுக்கு உதவினால் அதைவிட வேறேது புண்ணியம்.

நாம் உயிரோடு இருக்கும்போது எம்மால் ஏழை எளிய மக்களுக்கு உதவ முடியவில்லையே என்ற கவலையோடு நம் மத்தியில் பலர் வாழ்வது மறுப்பதற்கில்லை. பொருளாதாரத்தால் மேற்கொள்ளும் எத்தனையோ காரியங்களுக்கு நிகரானதும் - மேலானதும் இந்தக் கண்தானம் ஆகும்.

அ.அன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனில் இலங்கையர் எவருக்கும் பாதிப்பில்லை

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

உக்ரைன் - ரஷ்யாவுக்கு இடையில் போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், பல நாடுகள் உக்ரைனிலுள்ள தமது நாட்டு பிரஜைகளை சொந்த நாடுகளுக்கு திரும்புமாறு அறிவித்துள்ளன.

அதேவேளை, உக்ரைனில் தற்போது 42 இலங்கையர்கள் உள்ளனர் என்றும், அவர்களில் 7பேர் மாணவர்கள் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது அவர்களுக்கு எந்தப் பிரச்சினை யும் இல்லை என்று தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சு, அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் அமைச்சு செயற்படுகின்றது என்றும் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் இலங்கைத் தூதரகம் இல்லாத நிலையில், துருக்கியில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. உக்ரைனில் அவசரகால நிலைமை ஏற்படும் பட்சத்தில் அங்குள்ள இலங்கையர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-இ)

# ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளத் தயார்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, பெப். 16

ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால்கூட அதனை எதிர்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சி தயாராக உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

முடிந்தால் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு நாம் சவால் விடுக்கின்றோம். தேர்தலை சந்திக்க அச்சமில்லையெனில் எதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும். சிறு சட்டத்திருத்தம் ஊடாக மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம். அதையும் அரசு செய்யாமல் இருப்பது ஏன்? அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை நடத்த முடியும். அவ்வாறு நடத்தப்பட்டால் அந்த தேர்தல்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அரசுக்கு எதிரான ஆட்டத்தை ஓரணியாகவே எதிர்கொள்வோம். தலைவர் சஜித் பிரேமதாஸவே எமது ஜனாதிபதி வேட்பாளர் - என்றார்.

(ம-4-44)




# அலுவலக திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 16

பூமணி அம்மா அறக்கட்டளையின் மக்கள் தொடர்பு அலுவலகத் திறப்பு விழா, இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அறக்கட்டளைத் தலைவர் நா. தனேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில், பிரதம விருந்தினராகவடக்குமாகாண பிரதிப் பணிப்பாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் கலந்து கொள்வார்.

(ம-ரி1)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானிகள் போராட்டம்!

கொழும்பு, பெப்.16

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான நிறுவனத்தின் விமானிகள் மன்றம் 'நேரத்துக்கு மட்டும் வேலை' தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வை வழங்க ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகம் தவறிவிட்டது என்றும், அதனால் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நேரிட்டுள்ளது என்றும் மன்றத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விமானிகள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விமானக் கடமைகளை அவர்களின் விமான அட்டவணைக்கு அமைய மட்டுமே செய்வார்கள் என்று அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களை ஒழுங்காக இயக்குவதற்குப் போதுமான விமானிகளை நியமிக்கவில்லை. விமானிகள் பற்றாக்குறையை நிரப்புவதற்காக வருடாந்த விடுமுறை மற்றும் பிற விடுமுறை நாள்களில்கூட எந்தவித தயக்கமும் இல்லாமல், இதுவரை கடமைக்குச் சமுகமளித்துள்ளனர்.

தற்போது அதிகரித்துள்ள பயணிகளின் வருகையால் விமான நிறுவனம் இலாபம் ஈட்டி வரும் நிலையில், விமானிகளின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வை வழங்காதமையை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிர்வாகம் நியாயப்படுத்த முடியாது. விமானிகளின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்காதவரை தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடருவார்கள் - என்றார்.

(எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்** நல்ல செயல்களைச் செய்து கொண்டே இருப்பீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். எடுத்த விடயத்தை முடிப்பீர்கள். பிரச்சினை அண்டாது. வியாபாரத்தில் நல்ல இலாபம் பார்ப்பீர்கள்.

**இடபம்:** புதிய வருமான வாய்ப்பு தேடிவரும். பயன்மிக்கநாள். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. கலைத்துறையினருக்கு கூடுதல் நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம்** : பிராணிகளின் மீது கருணை வரும். நற்செய்தி கிடைக்கும். கவலை ஒன்று தீரும். வெளிநாட்டு வியாபாரம் இலாபம் தரும். பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது.

**கடகம்:** எதிர்ப்பாலினத்தினரால் நன்மை ஏற்படும். நட்பு வட்டம் விரியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்களின் செயற்றிறன் கூடும். எடுத்த செயல்களில் பின் வாங்காமல் முன்னேறுவீர்கள்

**சிம்மம்:** சாதனை செய்து உறவினர் மத்தியில் மதிப்புப் பெறுவீர்கள். இத்தனை காலம் காத்திருந்த விடயம் கனிந்து பலனளிக்கும். சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

**கன்னி:** உயர்பதவியை எட்டுவீர்கள். பேச்சினால் நன்மைவரும். உறவினர்களுடன் இருந்து வந்த உரசல்கள் இன்று முடியும். பல காலம் தள்ளிப்போட்ட வேலைகளை இன்று முடிப்பீர்கள்.

**துலாம்:** இளைஞர்களுக்கு நன்மை உண்டு. கவலை தீரும். பணத்தை கையாளும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆராய்ச்சி மனப்பான்மை வரும். பேச்சாற்றல் கூடும்.

**விருச்சிகம்:** நண்பர்களை அனுசரித்துச் செல்வது மிகவும் நல்லது. எதிர்பாராத செலவுவரும். ஆனாலும் மனவருத்தம் அடையமாட்டீர்கள். குழந்தைகளின் வாழ்வில் குதூகலம் நிறையும். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு:** சமூக வலைத்தளங்களில் கவனமாக இருங்கள். வம்பு பேச வேண்டாம். புதியவர்களுடன் பேச்சைக் குறைத்துக்கொள்ளுங்கள். திட்டமிட்ட பயணம் தள்ளிப்போகும். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**மகரம்** புதிய நண்பருடன் விழிப்புடன் பழகுவது நல்லது. குழந்தைகளாலும், வாழ்க்கைத்துணையாலும் நலம் உண்டாகும். ஜீரணம் சம்பந்தப்பட்ட ஆரோக்கியக் குறைபாடு வரக்கூடும்.

**கும்பம்:** உடற்பயிற்சியில் அதிக கவனம் செலுத்துவீர்கள். குடும்ப நலம் சீராகும். உங்களின் உழைப்பு வீண்போகாது. வியாபாரத்தில் கூட்டாளிகள் நன்கு ஒத்துழைப்பார்கள்.

**மீனம்:** வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பு மூலம் ஆதாயம் கிடைக்கும். உங்களின் மதிப்பு உயரும். இன்று சுபநிகழ்ச்சி நிகழும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பண வரவு அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றுப் போத்தலுக்கு சதொசவில் 10 ரூபா!

**கொழும்பு, பெப். 16**

**சதொசவில் 500 மில்லிலீற்றர் தண்ணீர்ப்போத்தலை 19 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் விலைப் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்:

சூழலைப் பாதுகாக்கும் நோக்கில், மீள்சுழற்சி செய்யக்கூடிய தண்ணீர்ப் போத்தலை அறிமுகப்படுத்தியுள்ளோம். 500 மி.லீ. தண்ணீர் போத்தலின் சில்லறை விலை 35 ரூபாவாகும். தண்ணீரைப் பயன்படுத்திவிட்டு, வெற்றுப்போத்தலை சதொசவில் மீள ஒப்படைத்தால் 10 ரூபா வழங்கப்படும். வரலாற்றில் முதன்முறையாகவே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

அரச நிறுவனங்கள் தண்ணீர்ப் போத்தலை வாங்கும்போது, அரச செலவைக் குறைக்கும் திட்டமும் உள்ளது. மொத்தக் கொள்வனவின் போது போத்தலொன்றுக்கு 17.22 வீத கழிவு வழங்கப்படும். அதாவது 6 ரூபா குறைக்கப்படும். ஆக 29 ரூபாவுக்கு வாங்கலாம். போத்தலை மீள ஒப்படைத்தால் 10 ரூபா கிடைக்கும். எனவே, 19 ரூபாவுக்கு 500 மி.லீ தண்ணீர்ப் போத்தலை வாங்க முடியும். மொத்த விலைக்கு வாங்குபவர்கள் இந்தச் சலுகையை பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (ம-4-44)

# தேயிலை உற்பத்தி மீண்டும் அதிகரிப்பு



கொழும்பு, பெப். 16

இரசாயன உரத் தட்டுப்பாடுக்கு மத்தியில், மீண்டும் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது என்று பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டம் தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில், இரசாயன உரத் தட்டுப்பாட்டால் மாத்தறை மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள சிறு தேயிலை விவசாயிகள் பலர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர்.

தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக அரசால் ஒதுக்கப்பட்ட இரசாயன உரங்களில் சில ஏனைய பிரதேசங்களில் அதிக விலைக்கு விற்கப்படுகின்றது.

சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து தேயிலைத் தோட்டங்களுக்கு நீர் விநியோகத்தை வழங்குவதற்கான செலவில் 50 வீதத்தை அரசு வழங்கும். நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தி 2020ஆம் ஆண்டை விட 2021ஆம் ஆண்டில் 21மில்லியனால் அதிகரித்துள்ளது - என்றார்.

அதேவேளை, இரசாயன உரங்களின் விலை அதிகரித்துள்ள நிலையில், தேயிலைத் தோட்டங்களுக்கு இயற்கை உரங்களை வழங்கும் முறையான செயற்பாட்டை அரசு பேணுவது பொருத்தமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமண வீரசிங்க தெரிவித்தார்.

இதனிடையே, தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் கேள்வி எழுப்பினார். ஆயிரம் ரூபா பிரச்சினை தற்போது நீதிமன்றத்தில் இருப்பதால் அமைச்சர் கருத்து வெளியிட மறுத்தார். எனினும் ஊழியர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் - என்று பதிலளித்தார். (ம-4-இ)

# சிமெந்து தட்டுப்பாடு முடிவுக்கு வந்தது

*அமைச்சர் அபேகுணவர்தன தெரிவிப்பு*

கொழும்பு, பெப். 16

சந்தையில் நிலவிய சிமெந்துக்கான தட்டுப்பாடு தற்சமயம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதேபோல கோதுமைமா போன்ற பொருள்களுக்கான தட்டுப்பாடு விரைவில் நீக்கப்படும் என துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அபேகுணவர்தன தெரிவித்தார்.

தற்போது துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருள்களை தாமதக் கட்டணமின்றி விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பண்டிகைக் காலத்தில் பொருள்களை தட்டுப்பாடின்றி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-15)

# தொல்புரம் பகுதியில் குடுவுடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், பெப்.16

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் குடு போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 32 வயதான இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம்மேற்கு வீரவத்தைப் பகுதியில் குடு போதைப் பொருளை ஒருவர் உடைமையில் வைத்திருக்கின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற வட்டுக்கோட்டைப் பொலிஸார் சிறப்புச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன்போதே 100 மில்லிகிராம் குடுவை உடைமையில் வைத்திருந்த மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். (ம-125)

# சொத்து முறைகேடு: 34 வழக்குகள் பதிவு

கொழும்பு, பெப். 16

கடந்த இரண்டு ஆண்டுகளில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் மகன்கள் அல்லது உறவினர்கள், அரச வாகனங்கள் அல்லது பிற அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பில், 34 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மகன்கள் அல்லது நெருங்கிய உறவினர்கள், வாகனங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியிருப்பதும், அல்லது சட்டத்துக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுத்தியிருப்பதும் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியை உடனடியாக நீக்க அரசாங்கம் முடிவு எடுத்துள்ளது.

அரச வாகனங்கள் அல்லது பிற சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துவோர் தொடர்பில் உடனடியாகத் தகவல்கேட்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று உளவுத்துறைக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் அல்லது ஏனைய சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் உறவினர்கள் 16பேர் தொடர்பில் அரசுக்கு ஏற்கனவே தகவல் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

# செயலில் இறங்குவதுதான் ஐ.ம.சக்தியின் கொள்கை!

*சஜித் தெரிவிப்பு*



கொழும்பு, பெப். 16

இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து, அனைத்து எதிர்க்கட்சிகளும் விமர்சனங்களை மட்டுமே முன்வைத்தன. எனினும் அதிகாரமின்றியே வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் முன்மாதிரியை ஐக்கிய மக்கள் சக்தியே வழங்கி வருகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யூ.பி.விஜேகோன் ஞாபகார்த்த அறக்கட்டளையால் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபி திறக்கும் நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

200 ஆடைத் தொழிற்சாலைகள் திட்டத்தை அன்று அமைத்து [illegible] படுத்தியபோதிலும் இன்று இந்தப் பேரழிவு தருணத்தில் ஆடைத் தொழிற்சாலைகளை வைத்துத்தான் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற நிலைக்கு வந்துள்ளோம். ஆட்சியதிகாரம் இல்லாமலேயே மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களிலிருந்து ஆட்சியதிகாரம் இருக்கும் போது மேற்கொள்ள முடியுமான வேலைத்திட்டங்கள் எவ்வாறு அமையும் என்பது குறித்து சில மதிப்பீடுகளை மேற்கொண்டு பார்க்க முடியும் - என்றார். (ம-4-இ)

# கடந்த 10 நாள்களில் 31,000 சுற்றுலாவிகள்

கொழும்பு, பெப். 16

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெப்ரவரிமாதம் முதல் பத்து நாள்களுக்குள் சுமார் 31 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் கடந்த பத்து நாள்களுக்குள் இலங்கைக்கு மொத்தமாக 31 ஆயிரத்து 343 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என்றும், ஒரு நாளைக்கு சராசரியாக 3 ஆயிரத்து 134 சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் ரஷ்யாவிலிருந்து 4 ஆயிரத்து 566 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதோடு ஐக்கிய இராச்சியத்திலிருந்து 3 ஆயிரத்து 799 பயணிகளும் இந்தியாவிலிருந்து 3 ஆயிரத்து 575 பயணிகளும் வந்துள்ளனர். ஜேர்மனி, பிரான்ஸ், உக்ரைன், போலாந்து மற்றும் கஸகஸ்தான் போன்ற நாடுகளிலிருந்தும் அதிக சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊடக அடக்குமுறையை கையிலெடுக்கிறது அரசு

## எதிரணி சீற்றம்

**கொழும்பு, பெப். 16**

**இந்த அரசு ஊடக அடக்குமுறையை மீண்டும் கையில் எடுத்து தனது கோரமுகத்தைக் காட்ட ஆரம்பித்துள்ளது. அரசின் இத்தகையை செயற்பாடுகளை அனுமதிக்கமுடியாது. இதனைத் தடுத்து நிறுத்த அனைவரும் அணிதிரள வேண்டும் -என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்துள்ளது.**

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிக்கையில்; நாட்டில் மீண்டும் ஊடக அடக்குமுறை தலைதூக்கியுள்ளது. ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீடுமீது, வெள்ளை வானில் வந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். நகரப்பகுதியிலேயே அவரின் வீடு அமைந்துள்ளது. இப்படியான பகுதியில் அரச அனுசரணை இல்லாமல் இப்படியான தாக்குதலை நடத்தமுடியுமா?

அத்துடன், சமூக ஊடகங்களில் அரசை விமர்சிப்பவர்கள் இலக்கு வைக்கப்பட்டனர். தற்போது அந்த நிலைமை உக்கிரமடைந்துள்ளது. மீண்டும் ஊடக அடக்குமுறை கையில் எடுக்கப்பட்டு, தனது கோர முகத்தை அரசு காட்ட ஆரம்பித்துள்ளது.

ஊடகவியலாளர் சமுதித்தவின் வீடு மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது தொடர்பில் பூரண விசாரணை நடத்தப்பட்டு, உண்மை கண்டறியப்பட வேண்டும் -என்றார். (ம-4-44)

# மஹாபொல சட்டவரைவில் சபாநாயகர் கையெழுத்து

மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டவரைவில், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்றுமுன்தினம் கையெழுத்திட்டார். இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றில், திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டிருந்

மஹாபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம், லலித் அத்துலத்முதலி மஹாபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ம-4-இ)


## தேவை

**சுன்னாகத்தில் இயங்கும் விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் தேவை.**

**(ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)**

**தகைமைகள்:**

**விற்பனை உதவியாளர்**

- க.பொ.த (சாதாரணம்) கற்றிருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
- வயதெல்லை 19 - 45 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிபரக் கோவை. அடையாள அட்டை போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து **28.02.2022** இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (cs.18973) (2.7)

முகவரி: **Blue Skyy Agency, 99, Palaly Road. Thirunelvely.**


### ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்

# சட்டப் பலவீனத்தால் தண்டனை விலக்கு!

### சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு, பெப். 16

சட்ட பலவீனங்கள் மற்றும் அரசியல் செல்வாக்குக் காரணமாக ஊடகவியலாளர்களுக்கு எதிரான சம்பவங்கள் மூடிமறைக்கப்பட்டுள்ளதுடன், தொடர்புடையவர்கள் தண்டனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர் என்று சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஊடகவியலாளர் சமுதித்தவின் வீட்டின் மீதான தாக்குதல் தொடர்பாக, சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலானது, வெட்கமற்ற மற்றும் பாரதூரமான சம்பவம். அவருக்கு இதற்கு முன்னரும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பு. மக்கள் செறிந்து வாழும் பகுதியில் வெள்ளை வானில் வந்த நான்கு ஆயுததாரிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர் எனக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தி, அந்த இனம்தெரியா நபர்கள் யார் என்பதை வெளிப்படுத்த வேண்டும் -என்றுள்ளது. (ம-4-இ)

# வவு. - அ'புரம் ரயில் சேவை நிறுத்தம்

கொழும்பு, பெப்.16

வவுனியா - அநுராதபுரத்துக்கு இடையிலான ரயில் சேவைகள் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் 5 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட உள்ளது.

ரயில் பொது முகாமையாளர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் மார்க்கங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 5 மாதங்களுக்கு ரயில் சேவைகள் நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



### கிண்ணியாவில்

# காட்டு யானைகளால் கடை, வீடுகள் சேதம்

கிண்ணியா பனிச்சங்குளம், செம்பிமோட்டை கிராமங்களுக்குள் நேற்றுமுன்தினம் இரவு காட்டு யானைகள் நுழைந்து பல சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

சுமார் 6, 7 யானைகள் குறித்த பிரதேசத்துக்குள் நுழைந்து பலசரக்கு கடையையும், இரு வீடுகளையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளன.

அத்துடன், தென்னந்தோட்டத்துக்குள் புகுந்த யானைகள் 15க்கும் மேற்பட்ட தென்னை மரங்களை சேதப்படுத்தியுள்ளன. (ம-ரி1)


## சேவைநலன் பாராட்டு

யா/நல்லூர் ஆனந்த வித்தியாலயத்தில் பதில் அதிபராக கடமையாற்றி 33 வருடகால சேவையினை பூர்த்திசெய்து இன்று (16.02.2022) ஓய்வுபெறும்

**திருமதி சிவகுமாரன் கோகிலவதி**

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்

வாழ்த்துபவர்:

**ஆசிரியர் - திருமதி தர்மாவதி ஏகாம்பரநாதன்** (CS 18678) 1-6

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் செயலிழப்புக்கள், தீவிரமான முழங்கால் பாதிப்பு பேச்சுவராத பாரிசவாதம், அல்சர், மாறாத புண்கள் உடனடி நிவாரணம். (cs.18572) (2.7)

T.P.: 077 321 2740


வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

## உடனடி வேலைவாய்ப்பு

**Accounts Assistant, Data Entry Operator, CCTV Technician, Receptionist, Store Keeper, Labour, Cleaning**

**074 138 3368** (CS 18581) 1-6

## மத்தியஸ்தர்கள் குழாத்தின் தவிசாளராக நியமனம் பெற்றதினை பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திரு. செல்லையா செல்வரட்ணம்**

நீலியம்பனை மல்லாகத்தினை சேர்ந்த திரு. செல்லையா செல்வரட்ணம் அவர்கள் தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவு இல: 255 மத்தியஸ்த சபையின் தவிசாளராக பதவி கிடைத்தமைக்கான நியமனக் கடிதத்தினை தெல்லிப்பளை பிரதேச செயலக மண்டபத்தில் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் மாவட்ட சிறந்த பயிற்சியாளர் ஆகிய திரு. ப.சனாதனசர்மா ஐயா அவர்களும் கலந்து கொண்டு, சிறந்த நிர்வாகியாக பட்டம் பெற்ற மதிப்புக்குரிய தெல்லிப்பளை பிரதேச செயலர் - சண்முகராசா சிவசிறி அவர்களால் 14.02.2022ம் திகதி அன்று வழங்கப்பட்டதினையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். தவிசாளர் அவர்கள் தற்போது வலிவடக்கு செஞ்சிலுவைச் சங்க செயலாளராக இருந்து சிறப்பான சேவையினை ஆற்றி வருகின்றார். அதே போன்று மக்கள் சேவையான மத்தியஸ்த சபை செயற்பாடுகளும் சிறப்பாக செயற்படுத்துவதற்கு எல்லாம் வல்ல இறையருள்கிடைக்கப்பெற வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்....

**நண்பர்கள்**

**இலங்கை வலிவடக்கு செஞ்சிலுவைச் சங்கம், யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தர்களும், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களும்.** (cs.42950) (2.6)

## உமி கொள்வனவு

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு உமி கொள்வனவு செய்யப்படும்.

**077 130 0190** (cs.42951) (2.6)

## K.P. திருமண சேவை

எம்மிடம் எல்லா இன மதத்தினருக்குமான மணமகள், மணமகன் ஜாதகம் உண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 077 0050 344

Web:kpthirumanam.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 வயது சிறுவனிடம் போதைப்பொருள் மீட்பு

பளை, பெப். 16

17வயதுடைய சிறுவன் ஒருவன், போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலை பகுதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனையின்போது, சிறுவனிடம் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சிறுவன் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

(ம-4,113)

# 31ம் நாள் நினைவஞ்சலி

| பூலோகத்தில் | சொர்க்கத்தில் |
|---|---|
| 13 • 11 • 1942 | 13 • 01 • 2022 |



அமரர்.

## திருமதி பத்மராணி சிவன்நேசன்

("நிம்மதி" தேவாலய வீதி சங்கானை)

அன்பின் திருவுருவே
பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய்
அன்பின் இலக்கணமாய்,
அறிவின் சிகரமாய், வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து
மறைந்து விட்டீர்களே!
நிலைகுலைந்து நிற்கின்றோம், உங்களை
நினைக்காத நொடிகளில்லை
ஆறவில்லை எம் இதயம் ஆண்டுகள் சென்றாலும்
அகலாது உங்கள் நினைவுகள்


எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும்,தொலைபேசி மற்றும் தகவல் தொடர்பு மூலம் அனுதாபம் தெரிவித்தோர்களுக்கும் இறுதிக் கிரிகைகளில் வந்து கலந்து ஆறுதல் கூறியோருக்கும் மலர்வளையங்கள், அனுதாப மடல்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் பற்பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

21/1B பிரான்சிஸ் வீதி
கொழும்பு – 06
தொ. பே இல – 0777667746

இங்ஙனம்,
குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 • 05 • 1962



மறைவு 17 • 01 • 2022

கடந்த 17.01.2022 அன்று இறைபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

## செபரத்தினம் குகேந்திரராசா (ஜீவா)

அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (16.02.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெறும். தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் மலேசியாவில் இறைபதமடைந்தபோது அவரது உடலத்தை சொந்த இடத்திற்கு அனுப்பிவைத்த அன்புள்ளங்கள் அனைவருக்கும், இறுதிக்கிரியைகளின் போது எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகள் நல்கியோருக்கும், மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபங்கள் தெரிவித்த உள்ளூர், வெளியூர் உறவுகளுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்ட மற்றும் சமூகவலைத் தளங்கள் ஊடாக ஆறுதல் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

சிவன்கோயில் வீதி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(cr.37587) 92.6)

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 10 • 05 • 1947



ஆண்டவர் மடியில் 11 • 02 • 2022

## திருமதி குருசுமுத்து அன்னம்மா

யாழ். நெடுந்தீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி குருசுமுத்து அன்னம்மா கடந்த (11.02.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி எய்தினார்

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து அருளாசி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மரியம்பிள்ளை செபமாலை ஆகியோரின் அன்பு மருமகளும், குருசுமுத்து அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மரியம்மா, அந்தோனிப்பிள்ளை (பொற்கொடி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவசகாயன் (சுவிஸ்), மேரி சுசிலா (சாந்தி), செல்வராணி (செல்வி), விஜயராணி (லதா-பிரான்ஸ்), ஜெயராணி, அமலராணி (அமலா) ஆகியோரின் அன்புத் தாயாரும், கீதா (சுவிஸ்), நியாஸ் (பாலாவி), ராஜாராம் (யாழ்ப்பாணம்), ரமேஷ் (பிரான்ஸ்), றெஜி (பிரான்ஸ்), பாலநந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வனஜா, றொபின் (சுவிஸ்), சியாத் (லண்டன்), றாகுல், லுக்மான், சாயிமா, டக்ஷாயினி, லிங்காயீசன், கிறிஷ்தான், கிபிஷாந், கியானா, றித்விக், றித்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், உமைஷா, அமார் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.02.2022) புதன்கிழமை மாலை 05 மணி முதல் வியாழக்கிழமை காலை 9.00 மணிவரை பார்வைக்கு எமது இல்லத்தில் (236/5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) வைக்கப்பட்டு, பாலாவியில் உள்ள ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்,
மு.ராஜாராம் (077 991 9562)
(021 222 3343)

# நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 14 • 08 • 1948



மறைவு 04 • 01 • 2022

அமரர் கலாநிதி

## வேலுப்பிள்ளை யுகபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - சென் ஜோன்ஸ் கல்லூரி)

எங்கள் குடும்பத்தலைவர் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் தந்தவர்கள், தொலைபேசியில் அழைத்து ஆறுதல் படுத்தியவர்கள், இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், கண்ணீர் அஞ்சலி பதாகைகளையும் அச்சிட்டு வழங்கியவர்கள், தேவையறிந்து உதவிகள் புரிந்தவர்கள் சமூகவலைத்தளங்களில் தமது ஆதங்கத்தை பகிர்ந்தவர்கள் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 14.02.2022 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியகிரியைகள் இன்று (16.02.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது. தொடர்ந்து 18.02.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.37, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ராஜா கிறீம்கவுஸ் "கம்சியா மஹாலில்" நடைபெறவுள்ள மலர் அஞ்சலி நிகழ்விலும், நிகழ்விலும் உங்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

(cs.42948) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடிகளை வென்று சாதித்தவர்கள் பெண்கள்

சி.சிறீதரன் எம்.பி. புகழாரம்



கிளிநொச்சி, பெப். 16

பெண்கள் பலர் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு இன்று பல துறைகளில் சாதித்துள்ளனர். அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத வளர்ச்சிகளைக் கண்டுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் மகளிர் அணியின் புதிய நிர்வாகத் தெரிவும், பொதுக்கூட்டமும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலக நாடுகளில் பெண்களின் வகிபாகங்கள் அதிகரித்துள்ளன. பல நாடுகளில் பெண்கள் பலர் தலைவர்களாக உள்ளனர். இலங்கையின் முதலாவது உள்ளூராட்சி மன்ற உறுப்பினராக நெடுந்தீவைச் சேர்ந்த செல்லம்மாள் என்ற பெண் தெரிவுசெய்யப்பட்டார். அவருடைய பெயரில், அவரது சொந்தக் காணியில் ஒரு பாடசாலை நிறுவப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்குள்ளும், பெண்கள் பணியாற்றுகின்றனர்.

அந்த அடிப்படையில் பெண்களின் வகிபாகம் என்பது மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அரசியல் நெருக்கடிகளை நாங்கள் சந்தித்தாலும், எங்களுடைய இலக்கு நோக்கி நாங்கள் பயணிக்க வேண்டும் -என்றார்.

(ம-4-113)

## பெண் கணக்காளர் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு பெண் கணக்காளர் தேவை.

வயது : 25-45

தொடர்புகளுக்கு: 077 1300 190

(CS 11886)1-6

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 . 12 . 1931

உதிர்வு 27 . 02 . 2021



### அமரர் அப்பாப்பிள்ளை நடராஜா

27.02.2021ஆம் திகதி சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அப்பாப்பிள்ளை நடராஜா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று (16.02.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

103/10, பிறவுண் வீதி, கொக்குவில்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்.

(CS 1857) 1-6

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு 19 . 06 . 1958

இறப்பு 26 . 01 . 2022



கடந்த (26.01.2022) அன்று சிவபதமடைந்த எமது குடும்பக் குலவிளக்கு

### திருமதி இராஜேஸ்வரி யோகரத்தினம்

எங்கள் அம்மாவின் மரணச்செய்தி அறிந்து இறுதிச் சடங்கில் நேரடியாகவும் தொலைபேசி ஊடாகவும் துண்டுப் பிரசுரம் மூலமாகவும் இறுதிச்செய்திகளை பகிர்ந்து கொண்ட உள்ளங்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

நாளை (17.02.2022) வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வு அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வேலம்பிராய், தச்சந்தோப்பு.

குடும்பத்தினர்.

(CR 7282) 1-6

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி இளையாச்சி



புளியந்தோட்டம் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இளையாச்சி நேற்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பறுவதம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தில்லையம்பலம், கமலாதேவி, சறோஜினிதேவி, விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயும், மனோன்மணி, காலஞ்சென்ற அரிராஜசிங்கம், சிவசோதி, சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2022) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு கொண்டுசெல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: 077 3126 769

(CR 7281) 1-6

## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர் பூக்கள்



எமது கலாமன்றத்தின் ஒவ்வொரு படி வளர்ச்சியினையும் மிக ஆழமாக நேசித்துவரும் முன்னாள் காரைநகர் பிரதேச செயலரும், யாழ். மாநகரசபை ஆணையாளரும், கவிஞரும் ஆகிய மதிப்பிற்குரிய இ.த. ஜெயசீலன் அவர்களது பாசமிகு தாயார்.

### அமரர் மேனகா தனபாலசிங்கம்

அவர்களது பிரிவுத் துயரிலுள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பர தில்லைக் கூத்தன் குஞ்சிதபாதம் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்-யாழ்கிளை.

நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.

(CS 1293)1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 04 . 1939

மறைவு 15 . 02 . 2022



### சின்னத்துரை தவராசா

கொம்மந்தறை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட சின்னத்துரை தவராசா அவர்கள் நேற்று (15.02.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னம்மாவின் மகனும், இணுவிலை சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளையின் மருமகனும் மற்றும் கமலேஸ்வரியின்(கிளி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், துரைச்சாமி, சின்னராசா, இரத்தினம்மா, தம்பிராஜா, மற்றும் சிவசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் பண்டிதர் ச.வே. பஞ்சாச்சரம், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் ஆகியோரின் மைத்துனரும், யோகச்சந்திரன், யோக ராஜா, பகீரதன், மேகலா, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜனி, சிவகுமாரி, அனுசா, சுரேந்திரன், குகசக்தி ஆகியோரின் மாமனாரும், பிரவினன், அபிராமி, அஸ்வினி, கவினா, கோகீஸ், வர்ஷா, சாம்பவி, லக்ஷி, சாயினி, மோனிகா ஆகியோரின் பேரனும், அஜயின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2022) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொம்மந்தறையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மயிலியதனை இந்துமயானத்திற்கு தகனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பகீரதன் - 00447735270243
மேகலா- 00447830256176
பார்த்தீபன்- 0094773216492

(CR 7278) 1-6

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 01 . 1950

மறைவு 15 . 02 . 2022



### தணிகாசலம் பஞ்சநாதன்

யாழ்ப்பாணம் ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட தணிகாசலம் பஞ்சநாதன் நேற்று (15.02.2022) சிட்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தணிகாசலம் பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சடாச்சரம் குணபூசணி தம்பதியரின் அன்பு மருமகனும், தபோநிதி அம்பாளின் அன்புக் கணவரும், அபர்ணாவின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், சண்முகநாதன், றகுநாதன், யோகதேவி மற்றும் கதிர்காமநாதன் (இளைப்பாறிய அதிபர், கனடா), உமாதேவி (மக்கள் வங்கி), Dr. ஆறுமுகநாதன் (U.S.A) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.02.2022) வியாழக்கிழமை காலை சிட்னி அவுஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உமாதேவி ஆலாலசுந்தரன்
17/7, ஐயனார் கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
075 504 8040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## புங்குடுதீவு மத்தி
# பெருங்காடு மூத்த நயினார் புலம் வரசித்தி விநாயகர் தேவஸ்தான
## புதிய சித்திரத்தேர்த்திருவிழா- 16.02.2022



- அபிஷேகம் காலை - 6.00 மணிக்கு
- மூலாலய பூஜை காலை - 7.00 மணிக்கு
- தம்ப பூஜை காலை - 7.15 மணிக்கு
- வசந்த மண்டப பூஜை - 9.00 மணிக்கு
- தேர் ரத ஆரோகணம் - 10.30 மணிக்கு

**வரசித்தி விநாயகர் வலம் வரும் திருத்தேர் வாழி**

நிறைவு நிலைய்மான சித்திரத்தேர் வாழி
நெடு மறைப் பொருளேயான வரசித்தி விநாயகர் தேர் வாழி
துறைதொறும் சோதியான சித்திரத்தேர் வாழி
தொன்மை மூத்த நயினார் புலம் வளர்ந்த தேர் வாழி
இறையருள் பெருக்கும் வரசித்தி விநாயகர் தேர் வாழி
ஈழத்து புங்கைப்பதி சிறப்பத்தேர் வாழி
மறையான் வடிவிலெழுந்த திருத்தேர்வாழி
மாண்புகள் பெருக்கிய திராவிடத் திருத்தேர் வாழி

**மதுரகவி, காரை. எம்.பி. அருளானந்தன்**

**சித்திரத்தேர் நிர்மாணிப்பு**
**ஸ்தபதி 'சிற்ப நுண்கலைச் செம்மல்', மட்டுவில் மைந்தன்**
**கதிர்காமநாதன் கதிர்றஞ்சன் (தவம்) குழுவினர்**
**கோகிலா சிற்பாலயம்,**
அம்மன் வீதி, பண்டத்தரிப்பு
தொ,பே.இல.: 077 416 7812
Fb - kokila sitpalayam
Whats ap: 077 252 9002

**தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:**

**PETFORM (Pvt) Ltd**
**Jaffna**
Urumpirai West, Urumpirai.
T.P.: 076 072 1245, 021314 9700

**அம்பாள் களஞ்சியம்**
பிரதான வீதி,
புங்குடுதீவு.

**ESS Jey Electricals**
09, Stanly Road,
Jaffna.

**சித்திவிநாயகர் ஸ்ரோர்ஸ்**
66, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்சங்க...

இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று மருத்துவ ஆய்வுக்கூட நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

சுகாதாரத் தொழிற்சங்க சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் அறிக்கை எமக்குக் கிடைத்துள்ளது.

எமது பிரச்சினை குறித்து அமைச்சரவையில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடப்பட்டிருக்கும் என நாம் நம்புகின்றோம்.

நாளை (இன்று) காலை 8 மணி முதல் சுகாதார சேவைகள் வழமைக்குத் திரும்பும் - என்றார்.

சம்பள முரண்பாடு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார தொழிற்சங்கத்தினர் கடந்த 9 நாள்களாகப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். அதனால் மருத்துவமனைச் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அதன்பின்னணியில் இந்தப் போராட்டத்துக்கு நீதிமன்று ஊடாக இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது. (எ-இ)

## 3 மோ.சைக்கிள்கள்...

ழந்துள்ளார்.

பண்டாரிக்குளம், அம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த சிறிரஞ்சன் (வயது-32) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

வவுனியா, கணேசபுரம், மரக்காரம்பளை வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவர், வீதியின் எதிர்ப்புறம் திரும்ப முற்பட்டுள்ளார். அந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்த்திசையில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் பெண்ணின் மோட்டார் சைக்கிளுடன் மோதி, கட்டுப்பாட்டை இழந்து பிறிதொரு மோட்டார் சைக்கிளுடனும் மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதனால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். ஏனைய இரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-110-18)

## ஐஸ் போதை;...

யினரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 33 மற்றும் 24 வயதுடையவர்கள் என்றும், இவர்கள் காங்கேசன்துறை, அந்தோனிபுரம் மற்றும் பருத்தித்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும், பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 818 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அதன் பெறுமதி சுமார் 6 மில்லியன் ரூபா என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகநபர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று தெரிவித்தனர். (அ-எ-26-23)

## ஜொனி...

மிதிவெடி மீட்கப்பட்டுள்ளது.

மண் திட்டி ஒன்றைச் சமப்படுத்தியபோது மிதிவெடி தென்பட்டதை அடுத்து, அது தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், மிதிவெடியை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டுசென்றனர். மீட்கப்பட்ட மிதிவெடி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தயாரிப்பான ஜொனி மிதிவெடி என்று கூறப்படுகின்றது.

இன்று நீதிமன்ற அனுமதிபெற்று மிதிவெடியைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## விலை...

அதிகரித்துள்ளதால் நஷ்டத்தில் செயற்பட வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிபொருள் விலைகளை அதிகரிக்க வேண்டும் என்று நிதியமைச்சிடம் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றது.

எரிபொருள்களின் தற்போதைய விலையைத் தொடர்ந்தும் பேணுவதால் ஏற்படும் நஷ்டத்தைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமே சுமக்க வேண்டியுள்ளது என்று எரிசக்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் நிதியின்மையால் எதிர்வரும் காலங்களில் டொலரைப் பெற்றுக்கொள்வது சவாலானதாக மாறியுள்ளது என்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு உடனடியாக எரிபொருளுக்கு வரிச் சலுகை வழங்க வேண்டும் அல்லது எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த சில நாள்களாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இது தொடர்பான பல வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ள போதும், நிதி அமைச்சு இது தொடர்பில் எவ்வித பதிலும் வழங்காது மௌனம் காட்டுகின்றது என்று கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)

## குளத்தில்...

னர்.

அவர்களில் ஒருவருக்கு பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மட்டுவில் கிழக்கு, இல்வாரையில் உள்ள குளத்தில் மூழ்கி 72 வயது மூதாட்டி ஒருவர் உயிரிழந்துள்ளார். மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த கிருஸ்ணன் சரஸ்வதி (வயது-72) என்ற மூதாட்டியே உயிரிழந்துள்ளார்.

இவரது மகனுக்கு நேற்றுமுன்தினம் திருகோணமலையில் திருமணம் நடந்துள்ளது என்றும், இவர் நேற்று இல்வாரை வைரவர் ஆலயத்துக்குச் சென்றபோது, ஆலயத்தின் முன்னுள்ள குளத்தில் தவறி வீழ்ந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. குளத்தில் மீன்பிடிக்கச் சென்றவர்கள், சடலம் மிதப்பதைக் கண்டு உறவினர்களுக்கு அறிவித்ததுடன், சடலத்தையும் மீட்டுள்ளனர். இவரது உடல் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனையின் போது கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மிருசுவிலில் உள்ள குளம் ஒன்றில் மூழ்கி 68 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது உடல் மீட்கப்பட்டு, சாவகச்சேரி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-9-131)

## பயங்கரவாதத்...

விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டில் 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி இவர் கைது செய்யப்பட்டிருந்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின்புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் பொட்டு அம்மானின் ஆலோசனைப்படி, இறுதிப்போர் நடந்த காலகட்டத்தில் கொழும்பில் இவர் நிதி சேகரித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வழக்கின் எதிரியான ராஜசேகர் சார்பில் சட்டத்தரணி தர்மராஜாவின் ஆலோசனையில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜா மன்றில் முன்னிலையானார்.

ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராஜா மன்றில் முன்வைத்த வாதங்களை அடுத்து, எதிரி மீதான குற்றச்சாட்டுக்களுக்கு தகுந்த ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்து, நீதிமன்று சந்தேகநபரை விடுதலை செய்துள்ளது. (அ-எ-இ)

## நீதி ...

இவ்வாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெள்ளை வாகனத்தில் வந்த சிலர், சமுக செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக்க என்ற இளைஞரை பலவந்தமாக தூக்கிச்செல்லும் காட்சியை ஊடகங்கள் வாயிலாக காணமுடிந்தது. அவர் இது தொடர்பில் நேரலையைக் காண்பித்திருக்காவிட்டால் இந்நேரம் எங்கிருக்கிறார் என்பது தெரியாமல் போய்இருக்கும்.

நபர்களை பொலிஸார் கைது செய்ய வேண்டுமானால் அதற்கென நாகரிகமான நடைமுறைகள் உள்ளன. பொலிஸ் சீருடையில் வரவேண்டும். பொலிஸ் ஜீப் இருக்க வேண்டும். அதேபோல குற்றம் என்ன என்பது பற்றி சம்பந்தப்பட்டவருக்கு தெளிவுப்படுத்த வேண்டும். ஷெஹான் மாலக்க விடயத்தில் இது எதுவும் அறிவிக்கப்படவில்லை. கடத்தல் பாணியிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. ஜனநாயக சமூகத்துக்கு இது பொருத்தமற்ற செயற்பாடாகும். இதனை நாம் கண்டிக்கின்றோம்.

ஜெனிவாத் தொடரில் அரசு நிவாரணத்தை எதிர்பார்க்கின்றது. மூளை உள்ள எவரும் இவ்வாறான செயலில் ஈடுபடமாட்டார்கள்.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் சுதந்திரமாக உலாவருகின்றனர். ஆனால் நீதிக்காக குரல் எழுப்பியவர்களை மௌளிக்க வைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமல் உள்ள சட்டமா அதிபர், அரசியல்வாதிகளின் தேவைக்கேற்ப செயற்படக்கூடாது - என்றார். (எ-இ)

## மின்...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது, பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

குறுகிய காலப்பகுதிக்கு தனியார் நிறுவனங்கள் தனியான மின்பிறப்பாக்கிகள் இருந்தால் அவற்றினூடாக மின் உற்பத்தியை பெற்றுகொள்ள முடியும். முடிந்தளவுக்கு இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பெரிய அளவிலான நிறுவனங்கள் மின்பிறப்பாக்கிகள் மூலம், ஒரு நாளைக்கு நான்கு மணி நேர மின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டும்.

மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை குளிரூட்டிகளைப் பயன்படுத்தும் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தங்கள் சொந்த மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்த வேண்டும்.

தற்போது தேவையான மின் உற்பத்தி தற்போது இடம்பெறுகின்றது என்று மின்சார சபை அறிவித்துள்ளது. அதனால் மின்வெட்டுக்கு அவசியமில்லை.

அதேவேளை, மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழக்கும் பட்சத்தில் மின்வெட்டு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. 100 மெகாவாட்ஸ் மின்னுற்பத்தி நிலையம் செயலிழக்குமாக இருந்தால் மின்வெட்டு இடம்பெறாது. அதற்கு மேற்பட்ட மெகாவாட்ஸ் மின் உற்பத்தி செய்யும் மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்தால் ஒரு மணிநேரம் அல்லது ஒன்றரை மணிநேர மின்துண்டிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன - என்றார்.

அதேவேளை, எரிபொருள் பற்றாக்குறை காரணமாகவும், நீர்த் தேக்கங்களில் நீரைச் சேமிக்கும் வகையிலும் தினசரி மின்வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும் என்று நேற்றுக்காலை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. ஆயினும் நேற்றிரவு மின்வெட்டுக்கு அவசியமிருக்காது என்று அறிவித்துள்ளது.

மறுபுறத்தில் களனி திஸ்ஸ அனல் மின் நிலையத்துக்கு 12 நாள்களாக எரிபொருள் கிடைக்கவில்லை என்று இலங்கை மின்சார சபையின் மேலதிக பொதுமுகாமையாளரை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எரிபொருள் பற்றாக்குறையால் துல்கிரிய மற்றும் மத்துகம மின் உற்பத்தி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன என்றும், சபுகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்திலும் எரிபொருள் பற்றாக்குறை காணப்படுகின்றது என்றும் அவை குறிப்பிட்டுள்ளன. (அ-எ-இ)

## கடனுக்கு...

மெற்றிக் தொன் டீசலை ஏற்றிய கப்பல் நேற்று கொழும்பை வந்தடைந்தது.

கப்பலை வரவேற்க எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சென்றிருந்தார்.

இதன்போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் பிரசன்னமாகியிருந்தார்.

60 நாள்களில் மீளச் செலுத்தும் கடன் சலுகையின் அடிப்படையிலேயே ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் இருந்து இந்த டீசல் இலங்கைக்கு கிடைத்துள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனையை அகற்றி ஹொட்டல் அமைக்க முயற்சி

## தமிழ் எம்.பிக்கள் மௌனம்

யாழ்ப்பாணம், பெப். 16

**திருகோணமலை நகர அரச மருத்துவமனையை அகற்றி, அவ்விடத்தில் சீன நிறுவனத்தின் ஹொட்டலை அமைப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், திருகோணமலையில் சில பகுதிகளை அநுராதபுரத்துடன் இணைக்க ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக நகருக்குள் இருக்கும் அரச மருத்துவமனையை மாற்ற முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனமாக இருப்பது ஆச்சரியத்தை உண்டு பண்ணுகின்றது.

தமிழ் மக்களுடைய இன விகிதாசாரத்தைக் குறைப்பதற்கு நிலங்களை துண்டாடுகின்ற அரசின் கபடத்தனமான நிகழ்ச்சி நிரல்களுக்கு எதிராக, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்கவேண்டும் -என்றார். (ம-4-20)

# உயிரிழந்த மீனவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி



யாழ்ப்பாணம், பெப். 16

கடந்த மாதம் 27ஆம் திகதி உயிரிழந்த வத்திராயன் மீனவர்களின் குடும்பங்களுக்கு முல்லைத்தீவு - கள்ளப்பாடு மீனவ சமூகத்தினரால் ஒரு லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்பட்டது.

வத்திராயன் கிராமத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான ஜோசப் பிறேம்குமார், அருண்குமார் தணிகைமாறன் ஆகியோரின் குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ம-ரி1,19)

## மேலும் சில நிறுவனங்களை அழைத்தது கோப் குழு!

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய கோப் குழுவில் முன்னிலையாகுமாறு மேலும் சில அரசாங்க நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கடந்த கூட்டத்தொடரில் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இதற்கமைய எதிர்வரும் 23ஆம் திகதி புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகமும், 24ஆம் திகதி இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனமும் அழைக்கப்பட்டுள்ளன. அத்துடன், மார்ச் 10ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபையும், மார்ச் 11ஆம் திகதி கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையும், மார்ச் 23ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியும், மார்ச் 24ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்தி சபையும், மார்ச் 25ஆம் திகதி மக்கள் வங்கியும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன. (வ-இ)

## மூதன்னையின் பாடல் நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 16

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 120ஆவது நூல் வெளியீடான கவிஞர் சி.கிருஸ்ணப்பிரியனின் 'மூதன்னையின் பாடல்' என்ற நூல் அறிமுக நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.சிவகரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், நூல் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் சி.கருணாகரனும், கவிதைத் தொகுப்புக் கருத்துரைகளை கவிஞர்களான மாதவி உமாசுதசர்மா, சி.சிவசேகரன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். சுகாதார வழிகாட்டலுக்கமைவாக இடம்பெறவுள்ள நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (ம-ரி1)

## தண்ணீர் வாளிக்குள் வீழ்ந்து குழந்தை சாவு

தினியாவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 6ஆம் கட்டை நெலுவ வீதி, பெலவத்தை பகுதியில் 2 வயதுக் குழந்தை தண்ணீர் வாளிக்குள் வீழ்ந்து உயிரிழந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

வீட்டின் முன்புறம் இருந்த சிறிய தண்ணீர்வாளிக்குள் வீழ்ந்தே குழந்தை உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன் னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ-இ)


### மணமகன் தேவை

1994 இல் பிறந்த. யாழ் இந்து கௌரவ குடும்பம் மிருகசீரிடம்.B/A பட்டதாரி 12 இல் செவ்வாய் 42 கிரகபாவம் உள்ள மணமகளுக்கு அரச உத்தியோகத்திலுள்ள மணமகன் தேவை. (cs.42949) (2.6)

துரை திருமணசேவை, ஐயனார் வீதி, சண்டிலிப்பாய். 077 656 8282 பதிவுகள் இலவசம் எம்மிடம் சகல தரப்பினரது ஜாதகங்களும் உண்டு.

### பணிப்பெண் தேவை

யாழ். நகர்ப்பகுதியில் வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை.
தங்கியிருந்து அல்லது வந்துபோகக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 033 2994

### வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் பில் கிளாக் (சிட்டை போடுபவர்) உடன் தேவை.
தொடர்புக்கு: 077 7488 093 (CS 18584) 1-6

### வேலைக்கு பெண் தேவை

சுன்னாகத்தில் இயங்கும் Fancy Store இற்கு பணிபுரிய பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 076 6424 608 (CS 18574) 1-6

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து குழந்தையைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
(ஞாயிறு விடுமுறை நாள்)
074 110 0639 (cs.42953) (2.6)

### காணி விற்பனைக்கு உண்டு

உரும்பிராய் திரு வீதியில் 6 1/4 பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை
(உரும்பிராய் பிரதேச செயலகத்திற்கு முன் ஒழுங்கை)
விலை : 2.5 கோடி
076 633 0895

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 34 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 14 அடி பாதையுடன் தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்.
நிலப்பரப்பு
A-32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்.
பயன்தரும் 165 தென்னைகள் உள்ளன. நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்). பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 350,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 26 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
நிலப்பரப்பு
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்
A-32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்.
பார்வையிடும் நேரம்:
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை.
ஒரு பரப்பின் விலை 300,000/=
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 814 7389
077 117 8578

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி விற்பனைக்கு. 16 பரப்பு பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது. 2 பரப்பாக பரப்பு எட்டு இலட்சம். புன்னாலைகட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி.
074 269 0854


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.